[19th March 1964

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இவ்வாறு தனிப்பட்டவர்கள், சுமார் 20 ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து கட்டடம் கட்டியும், என்னுடைய பகுதியிலே இருக்கின்ற நெல்லிக்குப்பம் பஞ்சாயத்து யூனியனில் ஏன் இது வரை ஆசுபத்திரி ஆரம்பிக்கப்படவில்லை.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதைப்பற்றிய தகவல் அரசாங்கத்திற்கு வந்தால் கவனிக்கலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், 1964–65-ம் ஆண்டில் புதிதாக பிரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதைப் பற்றி சுகாதார மான்யம் வரும்போது பேசிக் கொள்ளலாம்.

National Securities Rules

* 321 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the safeguarding of National Security Rules are applied to employees in State Government Service; and

(*b*) the number of cases dealt with under these Rules during 1961–62 and 1962–63.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Madras Civil Services (Safeguarding of National Security) Rules, 1954, are applicable to the employees of the State Government.

(*b*) Nil.

காதித் துறை

*322 கேள்வி—**திரு. முனு ஆதி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கக் காதி இலாகாவில் வேலை செய்யும் ஊழியர்கள், அதிகாரிகள், மாவட்ட ரீதியாக எத்தனை பேர் ?

(இ) இவர்களது ஊதியமாகவும், பஞ்சப்படியாகவும் மாதமொன்றுக்கு அளிக்கும் தொகை எவ்வளவு ?

(உ) இந்தக் காதி இலாகாவில் அன்றாட அலுவல் என்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANDRADIAR : (*a*) to (*c*) A statement [a] is placed on the table of the House.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இதில் "நம்பர் ஆஃப் ஸபார்டினேட்ஸ்" என்று போட்டிருப்பதில் என்னென்ன கேட்டகரியிலுள்ள ஆட்கள் எல்லாம் இருக்கிறார்கள் ? ஒவ்வொரு ஜில்லாவிலும் பெரிய அதிகாரி ஒருவர் போக அடுத்ததில் " நம்பர் ஆஃப் ஸபார்டினேட்ஸ் " என்று போட்டு அதில் இத்தனை பேர்கள் என்றும் போடப்பட்டிருக்கிறது. இவர்கள் என்னென்ன கேடர்களைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அபிஷியல்ஸ் என்று போட்டிருப்பது கெஸட்டட் ஆபீஸர்களைப் பற்றியது. அடுத்தாகப் போடப்பட்டிருப்பது கெஸட்டட் ஆபீஸர்கள் அல்லாத மற்றவர்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இந்தத் திட்டத்தில் பிளாக் லெவலில் இருக்கின்ற காதி எக்ஸ்டன்ஷன் ஆபீஸர்களும் சேர்க்கப்பட்டு இருக்கின்றார்களா ?

---

[a] Printed as Appendix on page 341.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : இதில் கொடுத்திருப்பது போல், காதி டிபார்ட்மெண்டும் சேரும். அதாவது எங்களுடைய நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள் இதில் இருக்கிறுர்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : It is stated in the recent order that there has been a lot of improvement in the sale of Khadi this year. May I request the Hon. Minister to give us figures if they are available regarding sale of Khadi, in 1963 in relation to previous years.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : தனிக் கேள்வி போடவேண்டும்.

லஞ்சங்கொடுத்தவர் மீது வழக்குகள்

* 323 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1963–ல் நம் மாநிலத்தில் லஞ்சம் கொடுத்தவர்கள் எத்தனை பேர் பேரில் வழக்குகள் தொடரப்பட்டன ?

(இ) அவ் வழக்குகளில் எத்தனை தண்டனையில் முடிந்தது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Nil.

(*b*) Does not arise.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, லஞ்சம் கொடுக்கின்றவர்களுக்குத் தண்டனை அதிகமா அல்லது லஞ்சம் வாங்குகின்றவர்களுக்குத் தண்டனை அதிகமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம், சட்டம், தீர்ப்பு அளிக்கின்ற நீதிபதி, இந்த இரண்டையும் பொறுத்திருக்கிறது.

திரு. செ. மாதவன் : தேர்தலில் லஞ்சம் கொடுக்கின்றவர்களைக் கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்து வருகின்றது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இதில் உதவி செய்யக்கூடிய ஆற்றல் இருக்கிறது. எப்படி எப்படிக் கண்டு பிடிக்க வேண்டுமென்று வழிகளைச் சொன்னுல் அதைப் பற்றிக் கவனிக்கலாம்.

திரு. ம. கமலநாதன் : விஜிலன்ஸ் கமிட்டியில் நான்–அபிஷியலையும் சேர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான்–அபிஷியலை இந்தக் கமிட்டியில் சேர்ப்பதாக உத்தேசம் இல்லை. ஆனுல் உத்தியோகப் பற்றற்றவர்களின் ஒத்துழைப்பு இதற்குத் தேவைப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த விஜிலன்ஸ் கமிட்டிக்கு ஏதாவது தகவல்கள் கொடுக்க இந்தக் கமிட்டியோடு, அங்கத்தினர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியுமா ? அப்படி ஏதாவது தகவல்கள் கொடுத்தால் அவை ரகசியமாக வைக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கத்தினர்கள் தொடர்பு கொள்ளலாம். அவ்விதம் தொடர்புகொண்டு ஏதாவது தகவல்கள் கொடுத்தால் ரகசியமாக வைத்துக்கொள்ளப்படும்.

திரு. செ. மாதவன் : இந்த அமைப்பின் மூலம் யார் யார் லஞ்சம் வாங்கினுர்கள் என்று கண்டுபிடிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற அமைப்பு என்று கருதுகிறேன். அப்படியானுல், தேர்தல் காலத்தில்